இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 29.10.2026

‘வெற்றி’ தப்பி ஓடும் திட்டம்!

முதலமைச்சர் விஜய், தொடங்கி வைக்காமல் பல திட்டங்கள் நாட்டில் நடைமுறையில் இருக்கிறது. அதில் ஒன்று ‘வெற்றி’ தப்பி ஓடும் திட்டம் ஆகும். மத்திய சிறையில் இருந்து கிளை சிறைகள் வரைக்கும் கைதிகள் சர்வசாதாரணமாகத் தப்பி ஓடுகிறார்கள்.

இதனை ஒரு திட்டமாக அமல் செய்துள்ளார்களா? அல்லது பரிகாரம் என்ற அடிப்படையில் ஆஸ்தான ஜோசியர் சொல்லி தப்ப விடுகிறார்களா? என இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

‘நாம் நமது படங்களின் மூலமாக பல்வேறு சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தினோம்’ என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் சொன்னார் முதலமைச்சர் விஜய். ஆமாம், அவை பாடத் திட்டத்தில் வைக்க வேண்டிய கருத்துக்கள் தான். ஒரு படத்தில் சிறையில் இருக்கும் விஜய், வலிப்பு வந்ததைப் போல நடிப்பார். காவலர்கள் கதவைத் திறப்பார்கள். அதில் இருந்து விஜய் தப்பிப்பார். இதனால் விழிப்புணர்வு பெற்ற கைதிகள் சிலர் அதே போல தப்பி இருக்கிறார்கள். எவ்வளவு பெரிய நல்வழி காட்டி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்!

தேனி மாவட்டச் சிறைச்சாலையானது தேக்கம்பட்டியில் செயல்பட்டு வருகிறது. 200 கைதிகள் வரை இங்கு வைக்கப்படலாம். ஆனால் 334 கைதிகள் இருக்கிறார்கள். கடந்த 26 ஆம் தேதி இரவு 10.00 மணி அளவில், மூன்றாவது பிளாக்கில் உள்ள ஒரு கைதிக்கு வலிப்பு நோய் ஏற்பட்டுள்ளதாகக் கூறி சில கைதிகள் கூச்சலிட்டனர். அந்த பிளாக்கில் பாரா காவலராகப் பணியாற்றிய ஸ்டாலின் பிரபு உள்ளே போய் பார்த்துள்ளார். அப்போது அவரைக் கைதிகள் தாக்கி இருக்கிறார்கள். முன் வாசலுக்கு வந்து அங்கு இருந்த காவலர்களையும் தாக்கி சாவியைப் பறித்து கதவைத் திறந்து தப்பித்துவிட்டார்கள். மொத்தம் 17 கைதிகள் தப்பி விட்டார்கள்.

சிறைத்துறை வரலாற்றில் மிகப்பெரிய சம்பவமாக இதைச் சொல்லலாம். அ.தி.மு.க. ஆட்சியில் 1995 ஆகஸ்ட் 15 அன்று 43 கைதிகள் தப்பிச் சென்ற நிகழ்வுதான் தமிழக வரலாற்றில் மிகப் பெரிய சிறை நிகழ்வு. வேலூர் கோட்டையில் இருந்த திப்பு மஹால் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 43 கைதிகள், 153 அடி நீள முள்ள சுரங்கப் பாதையைத் தோண்டித் தப்பித்தார்கள். தப்பி ஓடியவர்களில் 21 பேர் மட்டுமே பிடிபட்டனர்.

இந்த சம்பவம் நடந்த 31 ஆண்டுகளுக்குப் பிறகு தேனி ஆண்டிபட்டி அருகே உள்ள தேக்கம்பட்டி மாவட்டச் சிறையிலிருந்து ஒரே நேரத்தில் 17 விசாரணைக் கைதிகள், சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு தப்பியோடிய அதிர்ச்சி சம்பவம் நடந்திருக்கிறது. பணியில் கவனக்குறைவாக இருந்ததற்காக, தேனி மாவட்டச் சிறைச்சாலையைச் சேர்ந்த 9 சிறைப் பணியாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். கைதிகளைப் பிடித்து வருகிறார்கள்.

3வது பிளாக்கில் உள்ள ஒரே அறையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளில் ஒருவருக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டது போல நாடகமாடி உள்ளார். இதை உண்மை என நம்பி சிறப்பு எஸ்.ஐ. மதன்மோகன் மற்றும் சிறைக் காவலர் தங்கபாண்டி ஆகியோர் அறையைத் திறந்து வலிப்பு நிற்பதற்காக சாவிக் கொத்தை மொத்தமாக கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. சிறைகள் எவ்வளவு மெத்தனமாகக் கையாளப்படுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.

கைதிகள் தாக்கியதில் காவலர் தங்கபாண்டிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். சம்பவம் நடந்த அன்று இரவு நான்கு காவலர்கள் மட்டுமே பணியில் இருந்தது கைதிகள் எளிதில் தப்பிக்க உதவியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. தப்பிச் செல்லும் போது பணியில் இருந்த காவலர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை கைதிகள் பறித்துச் சென்றுள்ளனர்.

த.வெ.க. ஆட்சியில் கைதிகள் தப்பிப்பது சர்வ சாதாரணமாக ஆகி விட்டது. கடந்த ஐந்து மாதத்தில் 50 கைதிகள் பல்வேறு சிறைகளில் இருந்து தப்பி இருக்கிறார்கள்.

- **ஜூன் 21 செங்கல்பட்டு சிறார் கூர் நோக்கு இல்லம் 5 பேர் தப்பியோட்டம்.**
- **ஜூலை 1 தேனி காவல் நிலையம் ஒருவர் தப்பியோட்டம்**
- **ஜூலை 2 பாளையங்கோட்டை மத்திய சிறை ஒருவர் தப்பியோட்டம்**
- **ஜூலை 12 செங்கல்பட்டு சிறார் கூர் நோக்கு இல்லம் 12 பேர் தப்பியோட்டம்**
- **ஜூலை 13, 14 செங்கல்பட்டு சிறார் கூர் நோக்கு இல்லம் 11 பேர் தப்பியோட்டம்**
- **ஆகஸ்ட் 10 கன்னியாகுமரி அரசு மருத்துவமனை ஒருவர் தப்பியோட்டம்.**
- **அக்டோபர் 20 புழல் சிறை ஒருவர் தப்பியோட்டம்**
- **அக்டோபர் 21 புழல் சிறை ஒருவர் தப்பியோட்டம்**
- **அக்டோபர் 26 தேனி மாவட்ட சிறை 17 பேர் தப்பியோட்டம்**

திருவாளர் விஜய் அவர்கள் ஆட்சியின் சிறை சரித்திரம் இது. போதை சரித்திரம் தனி. பாலியல் சரித்திரம் தனி. காவல் நிலையங்களில் ‘சரித்திர பதிவேடு குற்றவாளிகள்’ என்று பட்டியல் வைத்திருப்பார்கள். அத்தகைய குற்றவாளிகள் துள்ளிக் குதிக்கும் ஆட்சியாக த.வெ.க. ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது.

தேனி மாவட்ட சிறையில் இருந்து கைதிகள் தப்பினார்கள் என்ற செய்தி வந்த அன்று சேலம் ஆட்டையாம் பட்டி காவல் நிலையத்தில் இருந்து ரவுடிகள் தப்பி ஓட்டம் என்ற செய்தி வெளியானது. விசாரணைக்கு காவல்நிலையம் அழைத்து வரப்பட்ட 2 பேர் தப்பி ஓடி இருக்கிறார்கள்.

குழந்தைகள் கடத்தல், குழந்தைகள் காணாமல் போதல், சிறுமிகள் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கப்படுதல், போதைப் பொருட்கள் எளிதில் கிடைத்தல், செயின் பறித்தல், பகலில் வெட்டுதல், கைதிகள் தப்பித்தல் இவை எல்லாம் ஒரு மாநிலம் எந்தளவுக்கு சட்டம் ஒழுங்கில் மிகமிக மோசமாக இருக்கிறது என்பதற்கான அளவுகோல்கள் ஆகும். இந்த அளவுகோல்கள் அனைத்திலும் விஜய் அரசு முன்னணியில் இருக்கிறது.

சட்டம் ஒழுங்கு முதலமைச்சர் விஜய் கையில் இருக்கிறது. அவர் காவல் துறை விழாக்களில் கலந்து கொண்டு சல்யூட் வைப்பதுதான் தனது கடமை என்று நினைக்கிறார் போலும்!

சிறைத்துறையைக் கையில் வைத்துள்ளார் மின்வெட்டுத் துறை அமைச்சர் நிர்மல்குமார். அடுத்தவர் துறைக்கு எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு துரை பதில் சொல்வார். ஆனால் தன் கைவசம் இருக்கும் அனைத்துத் துறைகளிலும் ஓட்டை.

உதவாக்கரைகளின் ஆட்சியில் நாடே திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாறிக் கொண்டு இருக்கிறது.

●●

தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமே தவிர

காவல்துறை ஆளுங்கட்சியின் ஐ.டி. விங் போலச் செயல்படக்கூடாது!

தூத்துக்குடி பேட்டியில் – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

தூத்துக்குடி, அக்.29- காவல்துறை தனது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமே தவிர, ஆளுங்கட்சியின் ஐ.டி. விங் போலச் செயல்படக்கூடாது என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடியில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-

த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட கைதிகள் சிறைகளிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோல், காவல்துறையின் செயல்பாடுகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது, ஆளுங்கட்சிக்குச் சாதகமாகப் பேசுவதும், அரசியல் தலைவர்களுக்குப் பதிலளிப்பதும் காவல்துறையின் பணியாக மாறியிருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. சட்டம் ஒழுங்கைக் காக்கவேண்டிய காவல் துறை தனது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமே தவிர, ஆளுங்கட்சியின் ஐடி விங் போலச் செயல்படக்கூடாது.

இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, மகளிர் அணியின் சார்பில் வரும் 31ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

தற்போது விலைவாசி உயர்ந்து வரும் சூழலில், அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள ஆவின் பொருட்களின் விலையை மட்டுமாவது கட்டுக்குள் வைத்திருக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

ஆனால், அதையும் இந்த அரசு செய்யவில்லை.

இந்த ஆட்சியில் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பொருட்களின் விலையைக்கூடக் கட்டுப்படுத்த முடியாத நிலையே நிலவுகிறது என்பதுதான் உண்மை.

இவ்வாறு அவர் கூறினார்.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு,

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகளை கண்டித்து

திருவண்ணாமலையில் தி.மு.க. மகளிர் அணி கண்டன ஆர்ப்பாட்டம்!

கழக சட்டமன்ற கொறடா எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, அக்.29-

த.வெ.க. ஆட்சியில் நிலவிவரும் சட்டம், ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து திருவண்ணாமலையில் திமுக மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று முன்னாள் அமைச்சரும், கழக சட்டமன்ற கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்.

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.கவினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளி வருகின்றன. இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலை வாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க அரசை கண்டித்து தி.மு.க மகளிர் அணியின் சார்பில் வருகிற 31.10.2026 சனிக் கிழமை காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். அதனை தொடர்ந்து...



31.10.2026 சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணாசிலை அருகில் தவெக ஆட்சியில் நிலவிவரும் சட்டம், ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் கடுமையான விலை வாசி உயர்வை கண்டித்து திருவண்ணாமலையில் திமுக மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன் தலைமை வகிக்கிறார்,

முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பார்வதி சீனுவாசன், தெற்கு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்கள் விஜயலட்சுமி ரமேஷ், ஜெயராணி ரவி, முன்னாள் மாவட்ட ஊராட்சிகுழு துணைத் தலைவர் பாரதி ராமஜெயம், பொதுக்குழு உறுப்பினர் அன்பரசி ராஜசேகர், போளூர் நகர மன்றத் தலைவர் ராணிசண்முகம், பேரூராட்சி தலைவர்கள் வேட்டவலம் கொரிநடராஜ், புதுப்பாளையம் செல்வபாரதி மனோஜ்குமார், பெரணமல்லூர் வேணிஏழுமலை, சேத்துப்பட்டு சுதாமுருகன், கண்ணமங்கலம் மகாலட்சுமிகோவரதனன், தேசூர் ராதாஜெகவீரபாண்டியன், திருவண்ணாமலை வடக்கு தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் கற்பகம்சரவணன், மாலனிவினோத்திவாகரன், வடக்கு தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் உ.நித்யா, ராணி வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திருவண்ணாமலை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண்கள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு கொள்முதல் விலை உயர்வு!

யூனிட்டுக்கு 41.50 ரூபா! யூனிட்டுக்கு 41.50 ரூபா!

முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி விமர்சனம்!

சென்னை, அக்.29-

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஒரு யூனிட் மின்சாரம் 41 ரூபாய் 50 காசுகளுக்கு த.வெ.க. அரசு கொள்முதல் செய்யவுள்ளது. இதற்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



த.வெ.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்தே தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது. இதனை சரி செய்ய வேண்டிய அமைச்சர் நிர்மல் குமாரோ இதுபற்றி கொஞ்சம் கவலைப் படாமல் உள்ளார்.

இதனிடையே, கடந்த மாதம் ஒரு யூனிட் மின்சாரம் 37 ரூபாய் 50 காசுகளுக்கு கொள்முதல் செய்யப் படுவதாக அறிவிக்கப் பட்டது. தற்போது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 41 ரூபாய் 50 காசுகளுக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப் படவுள்ளது.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில், யூனிட்டுக்கு 41 புள்ளி 50 ரூபா.... யூனிட்டுக்கு 41புள்ளி 50 ரூபா..... என்று விமர்சித்துள்ளார்.

விஜய் ஆட்சி அமைந்தது முதல் தொடர் மின்வெட்டு!

மின் கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் த.வெ.க. அரசு!

பொதுமக்கள் கண்டனம்!

சென்னை, அக்.29-

வீட்டில் ஒரு ஃபேன், ஒரு லைட் மட்டுமே இருக்கும் நிலையில், மின்சார கட்டணம் 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு வந்துள்ளதாக ஏழை மூதாட்டி ஒருவர் கண்ணீர் மல்க பேசும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தமிழ்நாட்டில் விஜய் ஆட்சி அமைந்தது முதல், மின்கட்டணம் தாறுமாறாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். 200 யூனிட் இலவசம் என்று அறிவித்துவிட்டு, பன்மடங்கு கட்டணத்தை வசூல் செய்யும் த.வெ.க. அரசுக்கு பொது மக்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

மாதத்தில் பல நாட்கள் மின்சாரமே இல்லை. தொடர் மின்வெட்டால் மாநிலமே இருளில் மூழ்கி கிடக்கிறது. ஆனால் மின்சார கட்டணம் மட்டும் தாறுமாறாக பதிவாகி வருகிறது. குளறுபடிகளை த.வெ.க. அரசு ஒப்புக் கொண்டாலும் இதுவரை எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

இந்நிலையில், வீட்டில் ஒரு ஃபேன், ஒரு லைட் மட்டுமே இருக்கும்நிலையில், மின்சார கட்டணம் 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு வந்துள்ளதாக ஏழை மூதாட்டி ஒருவர் கண்ணீர் மல்க பேசும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.